

Preacher's Seminor at Thiruvallur

# The Word of Christ Work


Teaching Before Baptism


Bible School at Kumily


Baptism at Thiruvallur DT


Baptism at Ikkadu





Teaching Before Baptism at Ikadu

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Sep. 2016

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M & Nambikkai TV
on Monday &
Saturday 7.30 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

**To**

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 16 செப்டம்பர் 2016 கனி 10




THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிறைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ்
அவர்களின் செய்தி மற்றும்
வேதபாடம்,
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 193

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை செப்டம்பர் மாத இதழில்!

1. உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்று தீர்க்கதரிசியைப் பார்த்து சொன்ன ராஜா யார்?
2. நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைக ளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள் என்ற அப்போஸ்தலன் யார்?
3. தேசம் சோரம்போனபடியால் எந்த தீர்க்கதரிசியை நோக்கி: நீ போய், ஒரு சோரஸ்திரீயையும் சோரப்பிள்ளைகளையும் உன்னிடமாக சோர்த்துக்கொள் என்றுரைத்தார்?
4. எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு,அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம் என்ற அப்போஸ்தலன் யார்?
5. நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று எந்த தீர்க்கனைக்கொண்டு கர்த்தர் உரைத்தார்?
6. உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம் என எந்த சபைக்குப் பவுல் எழுதினான்?
7. உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் உரைத்தார்?
8. கண்காணியானவன் தன் சொந்தக் குடம்பத்தை நன்றாய் நடத்துகிறவனாக இருக்கவேண்டுமா?
9. உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம் போக்குகிறது என்று எந்த தீர்க்கனைக்கொண்டு கர்த்தர் உரைத்தார்?
10. ஒநேசிமு என்பவன் பவுலுக்கு எபேசுவிலே செய்த பற்பல உதவிகளையும் நன்றாய் அறிந்திருந்தவன் யார்?

### போட்டியாளர்கள் கவனிக்க...

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்கிறவர்கள் <u>இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம்</u>. நன்றி. – ஆசிரியர்

### இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

11

நாள்: 24.9.2016 சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: ஆசள. ஃபிராங்கலினா ஜான்
9, பாரதிதாசன் தெரு
ரோகினி தியேட்டர் சமீபம், காந்தல்
ஊட்டி -643 006, நீலகிரி.
தொடர்புக்கு: 9865446111



### மயில்

- சாலொமோன் காலத்தில் இந்தியாவிலிருந்தும் சிலோன் (Sri Lanka) -விருந்தும் இவைகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டு செல்லப்பட்டது - 1இரா.10:22
- ஆண் பறவை மிகவும் அழகுள்ளதாக இருக்கும்.
- இதை ரோமர்கள் புசித்திருக்கிறார்கள்.
- இஸ்ரவேலர்கள் இதை ஆபரணங்களுக்காக பயன்படுத்தினார்கள்
- இப்பறவை நம்நாட்டில் அதிகமாக காணப்படுகிறது.
- தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட பறவைகளில் இதுவும் ஒன்று.
- பெண் பறவை ஆண் பறைவையைப்போலிருக்காது.



Peacock

சிறுவர் பகுதி

# பரிதானம்

*வேதபகுதி: 1 சாமுவேல் 9:6-13*



யூதாவை அரசாண்ட யோசபாத் என்னும் ராஜா எருசலேமிலுள்ள தன் வீட்டிற்குச் சமாதானத்தோடே ஒருமுறை வந்தான். அப்பொழுது ஞானதிருஷ்டிக்காரனாகிய யெகூ என்பவன் அவனை சந்தித்து துன்மார்க்கனுக்குத் துணைநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? இதினிமித்தம் கர்த்தருடைய கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது. ஆனாலும் நீர் விக்கிரகத்தோப்புகளை தேசத்தை விட்டகற்றி, தேவனைத் தேட உம்முடைய இருதயத்தை நேராக்கின விஷயத்தில் நன்மையான காரியங்கள் உம்மிடத்திலே காணப்பட்டது உண்டு என்றான்.

ஆகையால் யோசபாத் என்ன செய்தான் தெரியுமா? எருசலேமிலே வாசமாயிருந்து, திரும்பப் பெயர்செபா தொடங்கி, எப்பிராயீம் மலைத்தேசமட்டுமுள்ள ஜனத்திற்குள்ளே பிரயாணமாய்ப்போய், அவர்களைத் தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் இடத்திற்குத் திரும்பப்பண்ணினான். அதுமட்டுமா நியாயாதிபதிகளை நோக்கி: நீங்கள் செய்கிற காரியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நியாயம்விசாரிக்கிற விஷயத்திலே அவர் உங்களோடு இருக்கிறார். கர்த்தருக்கு பயப்படும் பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை, பரிதானமும் அவரிடத்தில் செல்லாது என்றான்.

ஆம், கர்த்தரிடத்தில் அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை, பரிதானமும் அவரிடத்தில் எடுபடாது. ஆனால் இன்று உள்ள நியாயாதிபதிகளிடத்தில் இவையெல்லாம் பார்க்கிறோம். நீங்களோ இந்த யோசபாத் ராஜாவைப் போல கர்த்தருக்கு பயந்து விக்கிரகங்களை உங்களை விட்டு அகற்றிப் போட்டு கர்த்தருடைய நீதியையும் நியாயத்தையும் தேடுங்கள். நீங்கள் எங்கு சென்றாலும் கர்த்தருடைய கட்டளைகளை பிரஸ்தாபப்படுத்துங்கள். இந்த சிறு பிராயத்திலே நற்காரியங்களைக் கற்றுக் கொள்ளுங்கள் அவர் உங்களோடு இருப்பாராக!

**மனப்பாட வசனம்:**

“கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது, எச்சரிக்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள்;
உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை,
பரிதானமும் அவரிடத்திலே செல்லாது” (2நாளா.19:7)

Contact: 94435 58041

**JOIN OUR**

**WORLD EVANGELISM BIBLE SCHOOL**

**RIGHT NOW**



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 16 செப்டம்பர் -2016 கனி - 10

ஆசிரியருரை

## கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்

## The Lord Gives Wisdom




இந்த உலகத்தில் வாழ்வதற்கு ஞானம் மிகவும் முக்கியமாக இருக்கிறது. இந்த ஞானத்தை கொடுப்பவர் கர்த்தர் என்று நாம் திருமறையில் படிக்கிறோம். "கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதி.2:6). நீங்கள் தேவனிடத்தில் இந்த ஞானத்தையும் அறிவையும் பெற்றுக்கொண்டிருக்கிறீர்களா? முற்பிதாக்களின் காலத்தில் இந்த ஞானத்தைப் பெற்றுக்கொண்ட தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற நான்கு புருஷரைப் பற்றி நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். "இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்" (தானி.1:17). இவர்களுடைய நாட்களில் அநேக கல்விமான்கள் அறிஞர்கள் இருந்தார்கள். ஆனாலும் அவர்ளுக்கு மேலான ஞானத்தையும், சகல எழுத்திலும் தேர்ச்சியடையக்கூடிய விசேஷித்த அறிவையும் ஞானத்தையும் இந்த நான்குபேருக்கும் தேவன் கொடுத்தார். ஆகையால் இவர்களுடைய நாட்களில் ஆட்சிசெய்துகொண்டு வந்த ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் மிகவும் ஆச்சரியப்பட்டுப்போனான். இவர்களைப்போல வேறொருவரும் காணப்படவில்லை; ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக்கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான். ஆகையால் இவர்கள் ராஜசமுகத்தில் நின்றார்கள். கர்த்தர் கொடுக்கும் ஞானம் எவ்வளவு பெரியது என்று பார்த்தீர்களா? அநேகர் தேவனுடைய ஞானத்தை அசட்டைசெய்கிறார்கள். பிள்ளைகளை கர்த்தருடைய ஞானத்திற்கு நேரே வழிநடத்த தவறிவிடுகிறார்கள். தமக்கும் தம்முடைய வசனத்திற்கும் கீழ்ப்படிகிற யாவருக்கும் கர்த்தர் ஞானத்தை தருகிறார்.

ஆண்டவர் இயேசு ஊழியத்திற்காக பன்னிரண்டு சீஷர்களை தேர்வு செய்தார். பின்பு அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகையில் எருசலேமிலே காத்திருக்கும்படியாக சொல்லியிருந்தார். அந்தப்படியாக அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமிலே காத்திருந்தனர். அப்பொழுது அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் வரம் கொடுக்கப்பட்டது. "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே

பேசத்தொடங்கினார்கள்" (அப்.2:4). அப்பொழுது வானத்தின்கீழிருக்கும் சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள். தங்கள் தங்கள் பாஷையில் அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து; இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? என்று ஆச்சரியப்பட்டனர். கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக இவர்களை பிரித்தெடுத்து உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படும்படியான விசேஷித்த ஞானத்தை கொடுத்தார். இவர்கள் உலகமெங்கும் உள்ள ஜனங்கள் பேசுகிற பாஷைகளை பேசும் ஞானத்தை தேவனுடைய சமுகத்திலிருந்து பெற்றுக்கொண்டார்கள். இதைப்பார்த்த மற்ற தேசங்களிலிருந்து வந்த யூதர்கள் கலிலேயராகிய இவர்கள் நம்முடைய பாஷைகளை பேசுகிறார்களே என்று ஆச்சரியப்பட்டனர். அன்பானவர்களே, தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு ஞானத்தைக் தருகிறார்.

இரண்டாவது இந்த "ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்" என்று நீதி.3:13-ல் வாசிக்கிறோம். மனிதர்கள் பெரும்பாலும் சம்பாத்தியத்திலே தங்களுடைய வாழ்நாட்களை கழித்துவிடுகிறார்கள். ஞானத்தையும், புத்தியையும் சம்பாதித்தார்களாவென்றால், இல்லை. சம்பாதித்த பணத்தை ஞானமாய் பயன்படுத்த தவறிவிடுகிறார்கள். முதலாவது ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள் என்று காண்கிறோம். எந்த ஒரு பொருளையும் தேடினால்தான் கண்டடைய முடியும். ஞானம் வீதியில் விற்கும்பொருள் அல்ல அதை நாம் தேடி கண்டுகொள்ளவேண்டும். சோம்பேறி இவைகளை நாடமாட்டான். அவனோ உள்ளது போதும் என்று நித்திரை செய்வான். "சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில்போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்" என வேதம் போதிக்கிறது (நீதி.6:6). மிகவும் அற்பமான சந்துவாக இருந்தும் எறும்பு சுறுசுறுப்புடன் வேலைசெய்கிறது. ஆகையால் சோம்பலான மனிதன் எறும்பினிடத்தில் ஞானத்தைக் கற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறான். ஞானத்தைக் கற்பதற்கு யூனிவர்சிட்டி செல்லவேண்டியதில்லை. உங்கள் வீட்டு அருகாமையில் உள்ள அல்லது உங்கள் வீட்டிலே உள்ள எறும்பினை நீங்கள் கவனித்துப் பார்த்து ஞானத்தை கற்றுக்கொள்ளலாம். தேவன் படைத்த ஒவ்வொன்றிலுமிருந்து நாம் ஒவ்வொரு காரியத்தைக் கற்றுக்கொள்ள முடியும். தேவன் சகலத்தையும் ஞானமாக படைத்திருக்கிறார். அவர் சர்வ ஞானி என காண்கிறோம். "ஞானமே முக்கியம், ஞானத்தை சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்" (நீதி.4:7). என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள் என்ற வாக்கியத்தைக் கவனியுங்கள். உலகத்திலே எதைவேண்டுமானாலும் சம்பாதித்துவிடலாம் ஆனால் புத்தியை சம்பாதிப்பது கடினம். ஆகையால் என்னத்தைச் சம்பாதித்தாலும புத்தியைச் சம்பாதித்துக்கொள் என திருமறை நமக்கு ஆலோசனை சொல்லுகிறது. இந்த ஞானத்தையும் அறிவையும் புத்தியையும் கடையிலே போய் வாங்க முடியாது. அப்படி கடைகளில் வாங்கும் ஒரு பொருளாக இருந்தால் இன்று வசதிபடைத்தவர்கள்தான் இப்பூமியில் வாழமுடியும். இவைகளை கர்த்தர் தம்முடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளார். அவரிடமே இவைகளை நாம் பெற்றுக்கொள்ளமுடியும். ஆகையால் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள் அவர் உங்களுக்கு ஞானத்தையும் அறிவையும் புத்தியையும் கட்டளையிடுவார். சாலொமோனைப் பற்றி நாம் வேதத்தில் படிக்கிறோம். அவன் தேவனிடத்தில் ஞானத்தை



பெண்கள் பகுதி

## இழந்துபோன ஆத்துமாவுக்காக நாம் எவ்வாறு பேரார்வத்தைப் பெருகப்பண்ண முடியும்?

## How Can We Develop Passion For the Lost? *-Paula Bates*

இயேசு, யோவான்3:18-ல் "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" என்று நம்மிடம் கூறகிறார்.

வேதாகமத்திலுள்ளவைகள் தேவ ஆவியினால் அருளப்பட்டது என விசுவாசிக்க அறிந்திருக்கிறோமா?

1யோவான் 5:10-12 "தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான் தேவனை விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால் அவரைப் பொய்யராக்குகிறான். தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்"

இயேசு இல்லாமல் வாழ்வு இல்லை. வசனம் 13-ல் யோவான் நித்திய ஜீவனைப் பற்றிப் பேசுகிறார்

எபிரெயர் 2:3 நம்முடைய நண்பர்களோ, நம்முடைய குடும்பமோ இந்த மாபெரும் இரட்சிப்பை நழுவவிட முடியுமா?

தேவன் இம்மாபெரும் இரட்சிப்பைக் குறித்துப்பேசுகிறார். மேலும் இது இயேசுவாலே நமக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. கண்களினால் கண்ட சாட்சிகள் வேதாகமத்தில் தங்களுடைய சம்பவங்களை சொல்லுகின்றன.

எபிரெயர் 3:12,13 "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்"

பிரிஸ்கில்லாள், அப்போஸ்தலர் நடபடிகளில் ஒருபெண் தன் புருஷனோடு தேவனுடைய மார்க்கத்தை விவரித்துக் காண்பிக்க ஏன் விருப்பமுள்ளவளாயிருந்தாள்?

அவளது பின்னணி - ரோமாபுரியிலிருந்து துரத்தப்பட்டவளாயிருந்தாள் அப்.18:24-28 அவள் கிறிஸ்துவினிடத்தில் ஒரு உள்ளார்ந்த விசுவாசம் கொண்டவளாயிருந்தாள் அவள் தன் புருஷனோடும் பவுலோடும் குழுவாக ஊழியஞ்செய்வதில் விசுவாசம் கொண்டிருந்தாள்.

பயமின்றி - தன் புருஷனோடுகூட அப்பொல்லோவுக்குத் திட்டமாக விவரித்துக் காண்பிக்கச் சென்றாள். அவனுடைய போதகத்தைக்குறித்து திருத்தம் செய்தாள் - அவன் ஒரு பெரிய போதகனாயிருந்தான்.

ஆம், அவன் தேவனைக் குறித்தும் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைக் குறித்தும் போதித்தான் ஆனால் இயேசுவையும் அவருடைய ஞானஸ்நானத்தைப் பற்றியும் போதித்துக்கொண்டிருக்கவில்லை

அவன் அவர்களுக்கு மனந்திரும்புதலைக் குறித்தும் ஞானஸ்நானத்தைக் குறித்தும் மட்டுமே தொடர்ச்சியாகப் போதித்துக் கொண்டிருந்தான் ஏனென்றால் அறிந்துகொள்ள வேண்டிய தேவனுடைய மார்க்கத்தைக்குறித்து அறியாதவனாயிருந்தான்.

தவறான உபதேசத்தில் நிலைத்திருப்பவர்களுடன் சத்தியத்தைப் பகிர்ந்து கொள்ளுவது நம்முடைய கடமையாகயிருக்கிறது. நாம் நெருங்கிச் செல்ல ஏதுவில்லாத மக்களுக்கும்கூட நாம் இதைக்குறித்துப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

நாம் அதிகமாக அன்பு கூருகிறோமென்று இது அவர்களுக்கு புதுமையானதாகக் கூட இருக்கும்.

தெரிந்துகொள்ளலாம். அவன் தகுதியற்றவனாயிருந்தும் அவனுக்கு கடைசி நேரத்தில் பாவமன்னிப்பு அருளப்பட்டது. அந்தக் கள்ளனே தான் பெற்றுக் கொண்டதற்கு பாத்திரவானல்ல என்று சொல்லுகிறான் ஆனாலும் இயேசு அவனை மன்னித்து அவனுக்கு எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையைக் கொடுத்தார்.

2. பவுல் சொன்னார் தீமோ.1:15,16-ல் பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமானது அவர்களில் பிரதான பாவிநான்.

அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படி இரக்கம் பெற்றேன் என்றான்.

3. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் தேவனிடத்திலிருந்து இரக்கம் பெற்றேன் என்று சொல்லுகிறார். அந்தக் கள்ளனும் ஏறக்குறைய அதையேதான் சொல்லுவான்.

4. அந்தக் பக்கத்துச் சிலுவையில் மரித்தவனிடம் பார்வையைத் திருப்புங்கள். உங்களுக்காக இரட்சகர் மரித்தார்.

5. மையப் பகுதியிலுள்ள சிலுவையில் கவனம் வையுங்கள். அந்தக் கள்ளனைப் போல எளிதாக இரட்சிக்கப்பட வேண்டுமென்று நீங்கள் சொல்லுவது தெரிகிறது. ஆனால் அந்தக் கள்ளனுடைய மகா விசுவாசத்தை பரிசீலித்துப் பாருங்கள். எல்லாரும் விட்டுச் சென்றபோது அவன் இயேசுவில் விசுவாசம் வைத்தான். நம்புவதற்கு எந்தக் காரணமும் இல்லாதபோது அவன் நம்பினான். மீட்பது இயேசுவுக்கு அவசியமாய்பட்டதென்று தெரிகிறது.

6. நீங்கள் உண்மையாகவே நேசித்தால், அவரை நேசியுங்கள். அவர் உங்களிடம் என்ன செய்யச் சொன்னாரோ அதைச் செய்வீர்கள்.

7. அந்த மகா ஊழியத்தில் இயேசு சொன்னார். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். இந்த வார்த்தைகள் விசுவாசியாதவர்களுக்காக சொல்லப்பட்டவைகள். ஞானஸ்நானத்துக்காக அல்ல என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. ஆனால் விசுவாசமில்லாமல் ஒருவரும் ஞானஸ்நானத்திற்கு ஒருபோதும் வர முடியாது.



**இம்மாதம்**
**13,14,15 தேதிகளில்**
**குமுளியில்**
**வேல்டு இவான்சலிசம்**
**நடத்தும்**
**கூட்டங்களுக்காக**
**ஜெபியுங்கள்**



கேட்டுபெற்றுக்கொண்டான். அவன் தேவனிடத்தில் கேட்கும்போது உலகத்தையும் உலகத்தில் உள்ள பொருள்களையும் கேட்கவில்லை. இவையெல்லாவற்றையும் ஆண்டுகொள்ள ஞானமுள்ள இருதயத்தை அடியேனுக்குத்தாரும் என்று கேட்டான் (1இரா.3:9). எல்லாம் இருந்து ஞானமில்லையென்றால் அவைகளை எப்படி ஆளுவது? ஆகையால் சாலொமோன் இந்த விஷயத்தில் கர்த்தரிடம் நலமான காரியத்தைக் கேட்டான். இன்றைக்கு நீங்கள், உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைகளுக்கும் எவைகளை நாடிக்கொண்டிருக்கிறீர்கள்? உலகமும் உலகத்தில் உள்ளவைகளும் ஒருநாளில் அழிந்துபோகும். இப்படி அழிந்துபோகும் பொருட்களுக்காக ஒவ்வொரு நாளும் நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? என்றென்று அழியாத ஞானத்தை கர்த்தர் கொடுக்கிறார். அந்த ஞானத்தைப் பெற்றுக்கொண்டு கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். ஞானமுள்ள மகன் தகப்பனை சந்தோஷப்படுத்துகிறான். அதைப்போல நீங்கள் ஞானமுள்ள பிள்ளைகளாக இருந்து தேவனுடைய சித்தம் செய்ய ஒவ்வொருநாளும் நாடுங்கள். சாலொமோனைப்போல ஞானத்தை பெற்றவர்கள் ஒருவரும் இல்லை என்று சொல்லலாம். அந்த அளவு ஞானத்தை சாலொமோனுக்கு கர்த்தர் கொடுத்தார். சாலொமோனின் ஞானத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல ராஜாக்களும் நானா ஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்காக வந்தார்கள். "அவன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான்; அவனுடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து" (1இரா.4:32). இந்த ஞானம் அவனுடைய ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்தினது. நீங்களும் உங்களுடைய குடும்பமும் இவ்விதமாக சாலொமோனைப்போல ஆசீர்வதிக்கப்பட ஞானத்திற்கு முதலிடம் கொடுங்கள். இவைகளை தேவனிடத்திலிருந்து பெற்று ஞானமாய் வாழ கற்றுக்கொள்ளுங்கள்.

மூன்றாவது "ஞானவான்களுடைய போதகம் ஜீவ ஊற்று; அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம்" என்று நீதி.13:14-ல் படிக்கிறோம். ஞானமுள்ள போதகத்தை மூடர் அசட்டை செய்கிறார்கள். ஆனால் அந்த போதகம் ஜீவ ஊற்றாக இருக்கிறது. அது ஜீவனுக்கு நேரே வழிநடத்துகிறது. ஜீவகாலமெல்லாம் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அதினாலே பெற்றுக்கொள்ளலாம். மேலும் மரணக்கண்ணிகளுக்கு அவைகள் நம்மை தப்புவிக்கும். நினிவே பட்டணத்து மக்கள் அக்கிரமங்களால் தங்களை கெடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு யோனா மூலமாக தேவன் ஒரு எச்சரிப்பின் செய்தியை அனுப்பினார். இந்த யோனா ஒரு நாள் பிரயாணப்பட்டு நினிவேயின் மக்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தான். இன்னும் நாற்பது நாள் உண்டு நினிவே கவிழ்க்கப்பட்டுபோம் என்று பிரசங்கித்தான். இந்த போதகத்தைக் கேட்ட "நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்; சிறியோர் முதல் பெரியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தைவிட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும் ராஜா, தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக, நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம் தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள். யாருக்குத்தெரியும்; நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிரகோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று

கூறச்சொன்னான். அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைக் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார்" (யோனா 3:5-10). யோனாவின் ஞானமான போதகத்தை நினிவேயின் ஜனங்கள் ஏற்றுக்கொண்டு மனந்திரும்பியபடியால் அவர்கள் மரணகண்ணிக்கு தப்புவிக்கப்பட்டார்கள். இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே சகோதரியே, நீயும் ஞானமான போதகத்திற்கு உனது செவியை சாய்த்து செவிகொடுத்து, உங்களுடைய பொல்லாத வழியை விட்டு மனந்திரும்புங்கள். அப்பொழுது நீங்களும் மரணக் கண்ணிக்கு விடுவிக்கப்படுவீர்கள். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா காக்கப்படும். அப்பொழுது நித்தியமான வாழ்வை தேவனிடத்தில் பெற்றுக்கொள்வீர்கள். "ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்; மூடருக்குத் தோழனோ நாசமடைவான்" என்று நீதி.13:20-ல் வாசிக்கிறோம். நீங்கள் நினிவே பட்டணத்து மக்களைப்போல உள்ளவர்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அந்தப்பட்டணத்து மக்கள் ஏகோபித்து யோனாவின் பிரசங்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். நீங்கள் ஞானமுள்ள ஜனங்களோடே வாழ்வீர்கள் என்றால் நீங்களும் ஞானமடைவீர்கள். ஞானமற்ற சோதோம் கொமோரா பட்டணங்களில் வாழ்ந்த மக்களைப்போல உள்ள மக்கள் மத்தியில் வாழ்வீர்கள் என்றால் லோத்தைப்போல தேவ வார்த்தைக்கு செவிகொடுத்து காக்கப்படுங்கள். இல்லையேல் அவர்களோடு ஒருமித்து நீங்களும் அழிந்துபோவீர்கள். ஏனெனில் மூடருக்குத் தோழனோ நாசமடைவான் என மேற்கண்ட வசனத்தில் படிக்கிறோம். ஆகையால் ஞானத்தையும் புத்தியையும் நாடுங்கள்.

**ஞானம் எந்த சூழ்நிலையிலும் நம்மை காப்பாற்றுமா?**

ஆம், ஞானம் எந்த சூழ்நிலையிலும் நம்மைக் காப்பாற்றும். "ஞானத்தை அறிந்துகொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்; அதைப் பெற்றுக்கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண்போகாது" என்று நீதி.24:14-ல் வாசிக்கிறோம். உலகத்திலே பிறந்த ஒவ்வொருவரும் எதை அறிகிறார்களோ அல்லது அறியவில்லையோ, முதலாவது ஞானத்தை அறிந்துகொள்ள வேண்டும். அது கிடைக்கும் இடம் எது? அது உருவாகும் இடம் எது? அதைக் கொடுப்பவர் யார்? என்பதை அறிந்துகொள்ளவேண்டும். மனிதர்கள் பெரும்பாலும் உலகக்காரியங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து ஞானத்தை அறியாமலே போகிறார்கள். பிள்ளைகளுக்கு நலமான காரியங்களை செய்ய பெற்றோர் விரும்புகிறார்கள். நல்லதுதான். அந்த நலமான காரியம் என்ன என்பதை சற்றும் சிந்திப்பதில்லை. நலமில்லாத காரியத்தை விலைகொடுத்து வாங்கி பிள்ளைகளுக்கு கொடுக்கிறார்கள். இலவசமாக தேவன் கொடுக்கும் ஞானத்தையும் அறிவையும் பெற்றுக்கொள்ள பிள்ளைகளை பயிற்றுவிப்பதில்லை. ஆகையால் அநேகர் ஞானமற்றவர்களாகவே போய்விடுகிறார்கள். அன்பு நண்பரே நீ உன் பிள்ளைகளுக்கு தேவன் கொடுக்கும் ஞானத்தை பெற்றுக் கொள்ள வழியை ஏற்படுத்திக்கொடு. அப்பொழுது அவன் அந்த ஞானத்தைப் பெற்று எச்சூழ்நிலையிலும் காக்கப்படுவான். அது அவனுடைய ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும். அது அவனுடைய வாழ்க்கையின் முடிவில் உதவும். உன் நம்பிக்கையும் வீண்போகாது. இன்றே இவைகளை உங்களுடைய பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**நம்பிக்கை TV சேனலில் ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும் சனிக்கிழமைகளில்மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**



## பாடம் -20 பக்கத்திலிருந்த மிகவும் பிரசித்திபெற்ற கள்ளன்
## The Most Popular Thief In the Neighborhood *Jerry Bates*




**- சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

பிரதான ஊழியத்தை ஒப்புக்கொடுக்கும் முன் அந்தக் கள்ளன் இரட்சிக்கப்பட்டுவிட்டான்.

1. அந்த மகா ஊழியத்தைத் துவங்கும்போது இரட்சிப்புக்கான விதிகளைக் கொடுத்தார்.

2. ஆனால் அந்தக் கள்ளன் ஊழியம் துவங்கும் முன்னே மரித்துப்போனான். ஆகவே அந்த விதிமுறைகள் அவனுக்குப் பொருந்தாது.

உண்மையாகவே சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுமுன் மரித்துப்போனான்

1. பவுல் சொல்லுகிறபடி சுவிசேத்தினுடைய மையமே இயேசுவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் தான்.

2.இயேசுவானவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரை சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டிருக்க முடியாது.

3. சுவிசேஷத்தைப் பற்றிய முழு உண்மைகளை அவன் கேட்டிருக்கும் முன்னரே வாழ்ந்து மரித்துப்போனான். அந்தக் கள்ளனைக் காண்பித்து, நாமும் ஞானஸ்நானம் பெறாமல் இரட்சிக்கப்பட முடியும் என்று போதிப்பது சுவிசேஷத்தைக் கேட்காமலேயே நாம் இரட்சிக்கப்பட முடியும் என்பதை நிருபிப்பதுபோலாகும்.

அவனுடைய வரலாறு மரணப்படுக்கையில் ஒரு மனந் திரும்புதலை போதிக்கவில்லை. அப்படியே மரணப்படுக்கையில் ஒரு மனந்திரும்புதல் இருந்திருக்கக் கூடுமானால் அது இதுவாகத்தான் இருக்கும். சிலருடைய சிந்தையில் அந்தத் திருடன் புத்திசாலி அவன் விரும்பியபடி தன் வாழ்க்கையை மற்றவர்களை விடவும் சலுகை எடுத்துக் கொண்டு வாழ்ந்தான். அவன் மரணத்துக்கு சற்று முன்பு மனந்திரும்பினான். கர்த்தர் அவனை இரட்சித்தார். அந்தப் பிரகாரமாகவே நானும் இரட்சிக்கப்பட விரும்புகிறேன்.

அது மிகவும் ஆபத்தான ஒன்று. அநேக சம்பவங்கள் நிகழலாம். உனக்கு (மனந்திரும்ப) வாய்ப்பு கிடைக்குமுன்னே

1. கர்த்தர் வந்து விடலாம்.

2. எதிர்பாராதவிதமாக நீ மரித்துப் போகலாம்.

3. மனந்திரும்புவது கூடாது என்னுமளவுக்கு உன் இருதயம் கடினப்பட்டுப்போகலாம்.

4. தன் சீடர்களோடு போய்க் கொண்டிருந்த ஒரு புகழ்பெற்ற போதகரைப் பற்றிய கதையுண்டு. ஒருவன் போதகரே, எப்போழுது ஒருவன் மனந்திரும்ப வேண்டும் போதகர் அதைக்குறித்து யோசித்து விட்டு சொன்னார். உன் வாழ்க்கையின் கடைசி நாளிலே நீ மனந்திரும்புகிறாய் என்பதில் உறுதியாயிருக்கவேண்டும். அவருடைய சீடர்களில் அநேகர் முரண்பட்டனர். எந்த நாள் நாம் வாழ்வின் கடைசி நாள் என்பதில் நாம் ஒருபோதும் நிச்சயமாயிருக்க முடியாது என்றனர். அந்த போதகர் சிரித்துக் கொண்டே சொன்னார். அந்தப் பிரச்சினைக்கு பதில் இப்பொழுதே மனந்திரும்புங்கள் என்பதுதான்.

பவுல் எழுதினார். கவனியுங்கள் இதுவே அநுக்கிரக காலம், இதுவே இரட்சண்யநாள். மூடன் மட்டுமே கடைசி நிமிடம் வரை தன்னுடைய இரட்சிப்பைத் தள்ளிப்போடுவான்.

1. ஆனால் குறைந்தது ஒன்றையாவது அந்தக் கள்ளனிடமிருந்த நாம்

**அவளுடைய விருந்தாளி:** இயேசுவின் தாயாகப் போகவிருந்த மரியாளிடத்தில் எலிசபெத் அதிக அன்புள்ளவளாயிருந்தாள். எனவே தான் நடக்கவிருக்கிற இரகசியத்தை அறிந்தவளாய், "......எலிசபெத் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப் பட்டது. என் ஆண்ட வருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது" (லூக்.1:42,43) என்றாள். இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்று பயந்த மரியாளிடம் எப்பேர்பட்ட அன்பு காட்டியிருக்கிறாள் இந்த எலிசபெத்! மரியாளை வாழ்த்தி உபசரித்ததிலிருந்து (லூக்.1:42-45) என்ன குணம் தெளிவாகிறது? அன்புக்குப் பொறமையில்லை, தற்பெருமையுமில்லை என்ற குணம் தெளிவாகிறது. ஆம், எலிசபெத்தோ, வயது முதிர்ந்த ஒரு ஊழியக்காரி, தேவனுடைய சகல நியமங்களையும் கைக்கொண்டு நடந்தவள், தன்னைக்காட்டிலும் வயதில் குறைந்தவள் மரியாள், தன்னிலும் மேன்மையுள்ளவள், ஆண்டவருடைய தாய் என பரிசுத்த ஆவியினால் அறிந்து அவளைப் புகழ்ந்தாள். இது மற்றவர்களின் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாத குணமல்லவா? கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருக்குமானால் நாமும் எலிசபெத்தைப் போல் காணப்படுவோம். எலிசபெத்திடமிருந்த இந்த நற்குணம் இல்லையென்றால் நிச்சயமாகவே நமக்குள் கிறிஸ்துவின் ஆவி இல்லை என்று தான் அர்த்தம். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல".

**அவளுடைய மகன்:** எலிசபெத் பல வருடங்களாகக் காத்திருந்து, தேவசித்தம் செய்தபடியினால் ஸ்திரீகளிடத்தில் பிறந்தவனிலும் யோவான்ஸ்நானகனைப் போல் ஒரு தீர்க்கதரிசி இல்லை என்றும், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவன் என்று இயேசுவே சாட்சி பகர்ந்த மகனை பெற்றெடுத்தாள். யோவான் ஸ்நானகனைக் குறித்து பல காரியங்கள் முன்னறிவிக்கப்பட்டன. விருத்தசேதனம் பண்ணின நாளில் லூக்.1:60 "....அதற்கு யோவான் என்று பேரிட வேண்டும் என்றாள்". அவளுடைய இந்த காரியம் நமக்கு எதை வெளிப்படுத்துகிறது? இந்த பெயரை தேவதூதன் சகரியாவிடம் முன்னறிவித்திருந்தான். சகரியவோ தாம் ஊமையாயிருந்த போதும் தன் மனைவியிடம் இதைக்குறித்து ஏதோ ஒரு வழியில் தெரிவித்திருக்கவேண்டும். எனவே தான் தன் புருஷனோடு கூட தானும் தேவசித்தம் செய்ய வேண்டும், தேவதூதனால் அறிவிக்கப்பட்ட நாமம் தரிக்க வேண்டுமென தேவசித்தம் செய்வதில் கவனமாயிருந்தாள் எனத் தெரிகிறது. அத்தோடு கூட ஒரு பக்தியுள்ள தாயாகவும் அவளிருந்திருக்கிறாள். ஆனபடியால் கர்த்தருடைய கரம் தன் தாய் தந்தையாரிடம் இருந்ததுபோல யோவானிடமும் இருந்தது.

அன்பு சகோதரியே, நம் வேண்டுதல்களை கர்த்தருக்குத் தெரியப்படுத்துவது மட்டுமல்ல, கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியும், நியமங்களின்படியும் தேவனுக்கு முன்பாக விசுவாசத்தினால் வரும் நீதியை பெறும்படிக்கும் வேண்டுதல்கள் கேட்கப்படும் படிக்கும் காத்திருக்கவேண்டும். எலிசபெத்தின் இந்த நல்மாதிரியை நாமும் பின்பற்ற தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக!.

**தூங்கும் முன்பு டிவி பார்ப்பதை தவிர்த்து**
**வேதம் வாசியுங்கள்**



## வேத அறிவுப்போட்டி எண் *190*–ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1.N.ஜெபத்தாய் | - நாசரேத் |
| 2.Mrs.கெத்சி செல்வின் | - சென்னை |
| 3.J.ஆசா ஹெலன் | - புதுக்கோட்டை |
| 4.Mrs.லங்காஜீவரத்னம் | - சிவகாசி |
| 5.A.ரெபேக்காள் | - மதுரை |
| 6.Sis.ஏஞ்சலின் நேசமலர் | - கன்னியாகுமரி |
| 7.Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| 8.Mrs.சாந்தா பழனி | - தருமபுரி |
| 9.T.ராஜாத்தி | - கோம்பை |
| 10.R.ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 11.Mrs.ஏஞ்சலின் பாக்கியராஜ் | - பெரியகுளம் |
| 12.A.டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 13.Mrs.ஆலிவ் ஜெயபாலன் | -கோவை |
| 14.B.ஞானதீபம் ஜெபராஜ் | - இடையான்குடி |
| 15.S.தங்கம் | - கன்னியாகுமரி |
| 16.Mrs.ஃபிராங்கிலினாஜான் | - ஊட்டி |
| 17.Mrs.தேவதா தேவப்பிரியம் | - தாம்பரம் மேற்கு |
| 18.E.அதிசயம் | - பனைகுடி |
| 19.K.சாந்தி | - வாடிப்பட்டி |
| 20.S.அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 21.Mrs.ஜெயமணி ராஜம்மாள் | - கடலூர் |
| 21.Mrs.பவுலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 22.K.S.மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 23.G.நிர்மலா வின்செண்ட் | - புங்கமுத்தூர் |
| 24.Sis.இராஜம்மாள் | - திருப்பூர் |
| 25.Mrs.ஞானம் பிலிப்பு | - கோவை |
| 26.N.இந்திராஜெபக்கனி | - நாசரேத் |
| 27.Mrs.தேவபுஸ்பம் | - தூத்துக்குடி |
| 28.P.இன்பராஜ் | - சங்கர் நகர் |
| 29.Mrs.சரோஜினி ராஜபால் | - பாளையங்கோட்டை |
| 30.P.சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 31.Sis.ஜாய் மேத்யு | - விக்கிரமசிங்கபுரம் |
| 31.Mrs.ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 32.S.ஜாய் சந்திரகாந்தை | - நல்லூர் |
| 33.R.அனிதா நெகேமியா | - திருநெல்வேலி |
| 34.Mrs.அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 35.Mrs.ஷீலா அலெக்ஸ் | - கன்னியாகுமரி |
| 36.S.ஆசீர் துரைராஜ் ஜெபசிங் | - நாசரேத் |
| 37.Mrs.பாக்கியத்தாய் செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 38.A.ஜெயந்தி | - குமாரபாளையம் |
| 39.K.ராணி | - தூத்துக்குடி |
| 40.Mrs.சொர்ணமணி தாமஸ் | - தூத்துக்குடி |
| 41.R.அந்தோணியம்மாள் | - தூத்துக்குடி |
| 42.Mrs.நவரத்தினமேரி ஞானராஜ் | - தூத்துக்குடி |
| 43.E.ஜாய்ஸ் ஹெலன் புனிதா | - சென்னை |
| 44.S.தவமணி ராஜசிங் | - திருப்பூர் |
| 45.D.கமலா | - தூத்துக்குடி |
| 46.K.மோகன் | - குமாரபாளையம் |
| 47.Mrs.ருக்மணி ஜெயசீலன் | - பன்னைப்புரம் |

## வேத அறிவுப்போட்டி எண் *191*–ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1.P.இன்பராஜ் | - சங்கர்நகர் |
| 2.C.அதிசயம் | - நரிக்குடி |
| 3.Mrs.சரோஜினிராஜ்பால் | - பாளையங்கோட்டை |
| 4.B.ஞானதீபம்ஜெபராஜ் | - இடையன்குடி |
| 5.Mrs.ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 6.K.ஜீவாமிருதம் | - பாண்டமங்களம் |
| 7.S.சூர்யபிரகாஷ் | - பாண்டமங்களம் |
| 8.S.சாந்தாகுமாரி | - நாசரேத் |
| 9.Mrs.ரூபவல்யா | - நாசரேத் |
| 10.K.சத்தினாபாய் பிரசாத் | - மதுரை |
| 11.Mrs.பிரேமா தினகரன் | - தூத்துக்குடி |
| 12.Mrs.அல்லிராணி காடவின் | - சென்னை |
| 13.A.டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 14.Mrs.ராஜி ராமச்சந்திரன் | - வாலாஜாபேட் |
| 15.T.ஏஞ்சலின் நேசமலர் | - சாந்தாபுரம் |
| 16.S.தங்கம் | - சாந்தாபுரம் |
| 17.Sis.ஜாய் வாசுகி | - செட்டிபாளையம் |
| 18.K.சாந்தி | - வாடிப்பட்டி |
| 19.R.ராஜேஸ்வரி | - புலியூர் |
| 20.J.ரேச்சல் தமிழரசி | - மதுரை |
| 22.R.ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 22.K.S.மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 23.Mrs.ஃபிரங்கிலின் ஜான் | - ஊட்டி |
| 24.Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| 25.J.ஆலிவ் | - கோவை |
| 26.E.பழனிசாமி | - பொத்தனூர் |
| 27.T.கேசவன் | - பாண்டமங்களம் |
| 28.T.சரிதா | - பாண்டமங்களம் |
| 29.D.அபிஷேக் | - ஆவுடையார்பாளையம் |
| 30.Sis.சித்ரா | - வெங்கரை |
| 31.K.ராணி | - தூத்துக்குடி |
| 32.Mr.முருகன் | - வெங்கரை |
| 33.Miss.முருகாயி | - வெங்கரை |
| 34.S.ஜெயராஜ் | - பொள்ளாச்சி |
| 35.A.ஜெபக்கனி | - சங்கரன்கோவில் |
| 36.N.ஜெபத்தாய் | - தூத்துக்குடி |
| 37.T.சத்யா | - வெங்கரை |
| 38.Sis.ராஜம்மாள் | - திருப்பூர் |
| 36.R.அனிதா நெகேமியா | - ரெட்டியார்பட்டி |
| 36.Mrs.ஜெயமணி ஜெயபாண்டியன் | - கடலூர் |
| 37.P.சந்திரா டேனியல் | - நஞ்சான்குளம் |
| 38.K.மோகன் | - குமாரபாளையம் |
| 39.Mrs.இந்திராஜெபக்கனி | - நாசரேத் |
| 40.Sis.ஜாய் மேத்யு | - விக்ரமசிங்கபுரம் |
| 41.Mrs.சாந்தாபழநி | - தர்மபுரி |
| 42.Sis.T.ரஞ்சிதா | - கோம்பை |
| 43.Miss.S.ராஜம்மாள் மனோன்மணி | - சிவகாசி |
| 44.D.அமுதா தயாளன் | - பாடப்புரி |
| 45.D.செல்வபாக்கியம் | - மருதகுளம் |
| 46.J.பேபிஞானா | - சவுக்கியபுரம் |
| 47.Mrs.சுசிலா ராஜசிங் | - தளபதிசமுத்திரம் |
| 48.S.அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 49.A.K.ஜெயா | - மார்த்தாண்டம் |
| 50.Mrs.பொன்னிவிக்டர் | - தாராபுரம் |
| 51.D.நெல்சிபால்ராஜ் | - திருநெல்வேலி |
| 52.Sis.ஷிலாஅலெக்ஸ் | - திக்கனாம்கோடு |
| 53.Sis.அலிஸ் குணசீலி | - ஸ்ரீவைகுண்டம் |
| 54.Mrs.ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 55.Sis.R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 56.M.இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 57.Sis.தேவிராஜசிங் | - திருப்பூர் |
| 58.Mrs.ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 59.S.பிரேமிளா ரேவதி | - கோவை |
| 60.Sis.பிரேமிளா ஞானம் | - சென்னை |
| 61.Sis.சரோஜினி | - கரூர் |
| 62.R.ராமசாமி | - பொட்டிரெட்டிபட்டி |
| 63.Mr.ஜான் கென்னடி | - பொட்டிரெட்டிபட்டி |
| 64.P.நவீன்குமார் | - பொட்டிரெட்டிபட்டி |
| 65.T.பிரகாசம் | - பொட்டிரெட்டிபட்டி |
| 66.Mrs.D.தேவபுஸ்பம் | - நாசரேத் |

## கிறிஸ்து சிலுவையில் ஏன் மரித்தார்?
## Why Christ Died on The Cross?

*J.C.Choate*



ஆதியில் தேவன் மனுஷனையும், மனுஷியையும் சிருஷ்டித்தபோது அவர்கள் குற்றமற்றவர்களாகவும் பாவமற்றவர்களாகவும் இருந்தனர். ஆனால் அவர்கள் அந்த பரிசுத்த நிலையில் அதிகநாட்கள் நிலைத்திருக்கவில்லை, சீக்கிரமாகவே அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் ஆவியில் மரித்து, அழகான ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டு, மனுஷன் தன் முகத்தின் வியர்வையால் ஆகாரம் புசிக்கவும், மனுஷி வேதனையோடே பிள்ளை பெறவும், முடிவிலே சரீரத்தில் மரிக்கவும் (ஆதி1-3) இப்படியாக தங்களுடைய பாவத்தின் விளைவினை அனுபவிக்க வேண்டிய வனானான். இப்போது மனுஷன் பாவம் தனக்கும் தேவனுக்குமிடையே வந்ததால் தேவனுடைய பகைஞனானான்.

மனுஷன் குற்றமற்ற நிலைக்கு வரும்படி தானே தன்னை பழைய நிலைக்கு திருப்பிக்கொண்டு வர இயலாதபடியினாலும், அதைப்போலவே மிருக பலி தன் பாவத்தை நிரந்தரமாக நிவர்த்தி செய்ய முடியாதபடியினாலும், உலகத்தின் பாவங்களுக்காக குற்றமற்ற பலியாயிருக்கும்படிக்கும் தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராக ஊழியஞ் செய்யும்படிக்கும் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி, இவ்விதமாக மனுஷன் தேவனிடத்திற்கு வர ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தினார் (எபி.10:4; ஆதி3:15). எனவே குறித்த காலத்தில் கன்னிகையாகிய மரியாளுக்குப் பிறக்கும்படி தேவன் தம்முடைய குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். மரியாளுக்கு நியமிக்கப்பட்டிருந்த யோசேப்புக்குக் கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் காணப்பட்டு, ‘‘அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்’’ (மத்.1:21).

வாக்குரைத்திருந்தபடியும் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தபடியும் இயேசு இவ்வுலகத்தில் வந்தார் என அறிவிக்கப்பட்டிருக்கிறோம். ஆச்சரியம், ஆனால் தேவன் அவரை மரிக்கும்படிக்கு அனுப்பினார். ‘‘தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்’’ (யோவா.3:16-17) என வாசிக்கிறோம். தேவன் அவரை மரிப்பதற்கு மாத்திரம் அனுப்பவில்லை, பாவிகளுக்காகவும், தேவனற்றவர் களுக்காகவும், துன்மார்க்கருக்காகவும் அவர் மரித்தார். ‘‘அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக் கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய



**அவளுடைய வீடு:** அது ஒரு அமைதியான வீடா? சமுதாயத்தின் பார்வையில் அவள் வீடு நிறைவுள்ளதாயிருந்ததா? குடும்பமென்றிருந்தால் அதில் ஒரு குழந்தையாவது இருக்கவேண்டுமென சமுதாயம் கூறுகிறதே! லூக்கா1:7-ல் அவள் மலடியென்றும், வயது சென்றவளாயிருந்தாள் என்றும் கூறப்படுகிறது. அப்படியானால் எலிசபெத்தும் அவள் புருஷனும் குழந்தையில்லாமல் போனதினால் உண்டான ஏமாற்றத்தில் எப்படியிருந்திருப்பார்கள்? சமுதாயத்தின் ஏச்சு பேச்சுக்கெல்லாம் ஆளாயிருப்பார்கள். ஆனாலும் அவர்கள் என்ன செய்தார்கள்? லூக்கா1:13-ல் அவர்கள் தேவனை நோக்கி பல வருடங்களாக வேண்டுதல் செய்தார்கள் என தெளிவு படுத்துகிறது. எனவே தான் அவ்வசனத்தில் கர்த்தருடைய தூதன் ‘‘....சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்.....’’ என்றான். பல வருடங்களாக பிள்ளையில்லாத குடும்ப வாழ்க்கையில் கர்த்தர் ஒரு குழந்தையை வாக்குப் பண்ணுகிறார். சாதாரணமாக, நாம் பல காரியங்களுக்காக தேவனை நோக்கி ஜெபிக்கிறோம். நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கவில்லை யென்றால் ஜெபிப்பதை நிறுத்தி விடுவோம். ஆனால் இந்த தம்பதியாரோ வயது சென்ற போதும் வேண்டுதலை நிறுத்தவில்லை போலும். எனவே தான் கர்த்தருடைய தூதன் ‘உன் வேண்டுதல் கேட்கப்பட்டது’ என்றான். எலிசபெத் வயது சென்றவளாயிருந்த படியினால் தேவனால் அவர்களுக்கு ஒரு குழந்தையைக் கொடுப்பது கூடாத காரியமாயிருந்ததா? இல்லை. ‘‘தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை’’ (வச.27). இதுமாத்திரமல்ல ‘‘தேவனாலே எல்லாம் கூடும்’’. நாம் செய்ய வேண்டியதென்ன? நாட்கள் கடந்தாலும், வருடங்கள் கடந்தாலும் நம் வேண்டுதலை தேவனுக்குத் தெரியப்படுத்திக் கொண்டேயிருக்கவேண்டும். கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.

**அவளுடைய புருஷன்:** எலிசபெத்தின் புருஷனாகிய சகரியா எருசலேமில் தன் ஊழியத்தை நிறைவேற்றி ஊமையாகத் திரும்புகிறான் (லூக்.1:8-23). அன்பு சகோதரியே, இப்படிப்பட்ட நிலையில் தன் புருஷனை ஏற்றுக் கொள்ளவும் பேசமாட்டாத அவனுடன் கூடி வாழவும் எலிசபெத்திற்கு என்ன குணங்கள் தேவைப்பட்டிருக்கும்? தேவ பக்தியுள்ள, தேவனுடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் கைக்கொண்டிருந்த அவளுக்கு நிச்சயம் தேவனுடைய சித்தம் எதுவாயிருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் குணம் தான் தேவைப்பட்டிருக்கும். சில சகோதரிகள் சந்தோஷமான சூழ்நிலையில் அதிகமான பக்தி வைராக்கியத்துடனிருப்பர். ஏதாவது கஷ்டமோ, துன்பமோ நேரிட்டால் அவர்களிடமிருந்த விசுவாசம் பறந்து போய்விடும். தேவனையே தூஷிக்கவும்கூட செய்வார்கள். யோபுவின் மனைவி, யோபுவுக்கு நேரிட்ட பயங்கரமான சோதனையைப் பார்த்து: ‘‘.....நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்’’ (யோபு2:9). அநேகர் கூட தங்களுடைய புருஷர்களுடைய உத்தம ஊழியத்தை நினைத்து கர்த்தரை ஸ்தோத்தரிக்காமல், ஏமாற்றங்களும், துயரங்களும், துன்பங்களும் ஏற்படுகிற சமயத்தில் சலித்துக் கொண்டு, குடும்பத்தில் பிரச்சனை ஏற்படக் காரணமாகின்றனர். சகரியா ஒரு சிறந்த ஊழியன், ஊழியத்தை நிறைவேற்றி சரீரத்தில் ஒரு ஆசீர்வாதத்தை இழந்தவனாய் திரும்புகிறான். ஆனால் எலிசபெத்தோ தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாயிருந்த படியினால் சந்தோஷத்துடன் கூடி வாழ்ந்தாள்.

# அதிக நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்த ஸ்திரீ

## The Woman Who Had To Wait For A Long Time

*J.Glory Arjunan*

பெண்கள் பகுதி



எலிசபெத் ஒரு யூத ஆசாரியனின் மனைவி அவளைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பது நமக்கு மிகவும் அவசியம் எனக் கருதுகிறேன்.

**அவளுடைய குணம்:** அவளுடைய குணம் எப்படிப்பட்டதாய் இருந்தது? லூக்கா1:6-ல் அவள் தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாயிருந்தாள் என விவரிக்கப்பட்டுள்ளது. மனிதர் பார்வையில் நீதியுள்ளவர்களாக தங்களைக் காட்டுவதற்கு சிலர்மாய்மாலமான செயல்கள் செய்வர். மனிதர்களைப் பிரியப்படுத்த சிலர் வேஷம் போடுவர் வெளித்தோற்றத்தில் நீதியுள்ளவர்களைப் போல் தங்களை காண்பிப்பர். ஆனால் எலிசபெத்தோ தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாயிருந்தாள். அப்படியானால் மனிதர் பார்வையில் நீதியுள்ளவர் களாயிருப்பதோ? தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயி ருப்பதோ? எது எளிது? நம்மால் நீதியுள்ளவர்களாய் நடக்க முடியுமா? ரோமர்3:10..... "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்கிறது. பிலிப்பியர்3:8,9-ல் "...என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கு...." என பவுல் கூறுகிறான். அநேக ஸ்திரீகள் நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவை அறியாமல், மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாமை, பொய் சொல்லமை, திருடாமை, உதவிசெய்தல், இரக்கஞ்செய்தல் போன்ற நற்கிரியைகளைச் செய்து சுயநீதியுடைவர்களாயிருக் கின்றனர். ஆனால் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வரும் நீதியைக் குறித்து அறியாதவர்களாய், கிறிஸ்துவுக்குள் வராதவர்களாய் காலத்தைக் கழிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திகளும் கூட பழைய பாரம்பரியங்களில் நியாயப்பிரமாணத் தினால் வரும் சுயநீதிக்குக் கீழ்ப்பட்டு, கிறிஸ்துவின் கிருபைக்குக் கீழ்ப்படியாமலும், அவருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கும் என்ற விசுவாசத்தினால் வருகிற நீதியைப் பெறாமலும் இருக்கின்றனர். அன்பு சகோதரிகளே, நம்மை நாமே சோதித்துப்பார்ப்போம். உண்மையாகவே பவுல் கூறியதுபோல் கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று ஒதுக்கிவிட்டு விசுவாசத்தினால் வருகிற நீதியைப் பெற்று எலிசபெத்தைப்போல் தேவனுக்கு முன்பாக (மனுஷருக்கு முன்பாக அல்ல) நீதியுள்ளவர்களாய் இருப்போம்.



இரத்ததினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோம.5:6-9) என பவுல் சொன்னார். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவா.15:12-14) என்றார். "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உன்டாயிருக்கிறது' (1யோவா.4:9-10) என்று யோவான் எழுதினார்.

கிறிஸ்து பூமியிலே நன்மைசெய்கிறவராகவே சுற்றித்திரிந்தார். அவர் வியாதிகளை சொஸ்தமாக்கினார், குருடருக்குப் பார்வையளித்தார், மரித்தோரை எழுப்பினார், அவர் தேவனிடமிருந்து வந்தவர் என்பதை நிரூபிக்கும்படிக்கு இன்னும் அநேக அற்புதங்களைச் செய்தார். யோவான், "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டி ருக்கிறது" (யோவா20:30,31) என்றார்.

இயேசு பரிசுத்தமுள்ளவர், அவர் பாவமற்றவர். பவுல் இயேசுவைக்குறித்து பேசுகையில் தேவனைப் பற்றி, "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2கொரி.5:21) என்றார். "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை என்று பேதுரு (1பேது.2:22) கூறினார்.

மேலும் நாம், அவர் பாவமற்றவர், நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்த நல்ல மனுஷர், தேவனுடைய ஒரே பேறான குமாரன், உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என அறிவுறுத்தப்படுகிறோம். பவுல், "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்" (பிலி2:8) எனச் சொன்னார். பேதுரு, "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை, அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1பேது.2:21-24) மேலும், கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக் காக மரித்தார் (1கொரி.15:3) என்று பவுல் கூறினார்.

ஆனால் எதற்காக கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார், அதாவது யாரோஒருவன் ஏன் ஒரு நல்ல மனுஷரை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்க விரும்பினான்? இருந்தபோதிலும் அவர் மனிதனை இரட்சிக்கும்படியாகவந்தார் மாறுபட்ட கருத்துடைய பாவம் நிறைந்த மனிதனோடு பேசி சமாளிக்க வேண்டியவராயிருந்திருக்கிறார். தேவனுடைய பிரதிநிதிகளாக வர்ணிக்கப்படுகிற ஆசாரியர், வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் இன்னும் வேறுசிலர்கூட, மனிதருடைய கற்பனைகள் மற்றும் கட்டளைகளின் பின்னே சென்றார்கள், ஆனபடியினால் அவர்கள் பகை, பொறாமை மற்றும் துன்மார்க்கத்தினால் நிறைந்து காணப்பட்டார்கள். “அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை” (யோவா.1:11) என அறிவிக்கப்படுகிறோம். மீண்டும் இயேசு, “அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை” (யோவா.5:40) என்றார்.

பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்பட்ட வேளையில் இந்த மார்க்க வைராக்கியமுள்ள ஜனங்களிடம் பேசுகையில் பேதுரு, “இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங் களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரணஉபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது” (அப்.2:22-24) என்றார். கிறிஸ்து பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டபோது, பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்திருந்தான் (மாற்.15:9). இவ்வாறாக கிறிஸ்து தவறாக குற்றஞ்சாட்டப்பட்டு சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுக்கப்பட்டார். துன்மார்க்கரின் கைகளில் அவர் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அடிக்கப்பட்டார், பரியாசம் பண்ணப்பட்டார், சபிக்கப்பட்டார், கொடூர சிலுவையில் ஆணியறையப்பட்டார், இரண்டு கள்ளர்கள் மத்தியில் நிறுத்தப்பட்டு அங்கே மரிக்கும்படி கைவிடப்பட்டார். அதன்பிறகு அவர் கீழே இறக்கப்பட்டு, துணிகளால் சுற்றப்பட்டு, கல்லறையிலே வைக்கப்பட்டு, கல்லறை வாசலில் ஒரு பெரிய கல் புரட்டிவைக்கப்பட்டது. ஆனால் இயேசு தாம் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என வாக்களித்திருந்தார். மூன்று நாட்கள் கழித்து இயேசு உயிர்த்தெழுந்த கர்த்தராக கல்லறையிலிருந்து வெளியே வந்தார். மூன்றாம் நாள் காலையில், ஸ்திரீகள் கல்லறையைப் பார்க்கும்படி வந்தபோது, ஒரு தூதன் அவர்களுக்குத் தோன்றி, அவன், “அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்” (மத்.28:6) என்றான். இயேசு தம்முடைய அப்போஸ்தலருக்குத் தரிசனமான பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார், அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆட்சி செய்யும்படி மறுபடியும் வானத்திலே பிதாவினிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு (1கொரி.15:1-8; அப்.1:1-11) இன்றும் அங்கே வீற்றிருக்கிறார்.



4. முழு 66 புத்தகங்களும் வாசிக்கப்படுகிறபொழுது அவைகள் ---------- --------- ---- ------ என்பதை சொல்கின்றன.

5. எழுத்தாளர்கள் தாங்கள் என்ன எழுதவேண்டும் என்பதை எவ்வாறு அறிந்தார்கள்?

6. வேதாகமம் மனுஷனுடைய ----------------, தேவனுடைய திட்டமாகிய --- -------------------- மனுஷனை ---------------------- ஒப்புரவாகி ------------------- சந்தோஷத்தை அனுபவிக்கும் --------------- காட்சியுடன் முடிவடைகிறது.

7. தேவன் தம்முடைய தீர்க்கதரிசி ஏசாயாவின் மூலமாக தாம் -------------- -- ------------------ வீற்றிருக்கிறதாக விளக்குகிறார்.

8. சகலமும் இருப்பதற்கான விளக்கமாகிய என்ன எளிமையான சட்டதிட்டங்கள் பரிணாம கொள்கையை தள்ளுபடி செய்கின்றன?

9. எந்த மேதிய பெர்சிய ராஜாவானவன் பிறப்பதற்கு நானூறு வருஷங்களுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக பெயர் சொல்லப்பட்டான்?

10. வேதாகமம் எழுதப்பட்ட பொழுது, எதை நிரூபிக்க அற்புதங்கள் பிரயோஜனமாயிருந்தன.

11. அந்த அற்புதங்களை கண்ட சத்துருக்கள் எதை ஒத்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது?

12. மற்றெந்த புஸ்தகங்களையும் பார்க்கிலும் எந்த புஸ்தகத்தின் பிரதிகள் ஒவ்வொரு வருஷமும் அதிகமாக விற்பனை ஆகின்றன?

தெரிந்து கொள்வோம்

## உலகின் சிறிய ஆச்சரியங்கள்!



▶ உலகளவில் மிகச் சிறிய மீன் - இதன் பெயர் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால் ஆராய்ச்சியாளர்கள் இதனை paedocypris - progenetica என்று அழைக்கிறார்கள். இதன் வளர்ச்சி:7.9 மில்லி மீட்டர் இது இந்தோனேஷியாவில் உள்ளது.

▶ உலகளவில் மிகச் சிறிய ஊர்வன - ஷாமிலான்ஸ் (Chameleons) இது ஒருவகை பல்லி இனத்தைச் சார்ந்ததாகும்.

▶ உலகளவில் மிகச் சிறிய பாலூட்டி - கிட்டீஸ் - ஹாக் - நோஸ்டு - பேட் (Kittis - Hog - Nosedbat) இதன் அளவு: ஒரு நகத்தின் அளவாகும். இது மடகாஸ்கரில் உள்ளது.

▶ உலகளவில் மிகச் சிறிய பறவை - ஹம்மிங் பறவை (இதன் அளவு: 7.5 முதல் 13 செ.மீட்டர் வரை)

▶ உலகளவில் மிகச்சிறிய நதி - ரோநதி (பரப்பளவு 201 அடி நீளம்) இது அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ளது. மேலும் இது கின்னஸ் அவார்டு வாங்கியுள்ளது.

K.R.K.Ravi Asir, Associate Editor

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி" (நீதி.14:34).

இப்படியாக வேதாகமம் எழுதப்பட்ட சமயத்தில் வல்லமையின் மகத்தான செயலாக்கம் இருந்தது மாத்திரமல்ல, வேதாகமமானது அதனுடைய சத்துருக்களால் வரும் அழிவில் இருந்தும், தேவனுடைய வல்லமையின் தொடர்ந்த உபயோகத்தினால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது, நாமும் அது ஒருபோதும் அழியாது என்ற நிச்சயமுடையவர்களாயிருக்கிறோம்.

"வானமும் பூமியும் ஒழிந்து போம்; என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" மத்.24:35

வேதாகம புத்தகம் இருக்கும் படியாக அதை கொண்டு வந்த வல்லமையானது, அதை பாதுகாத்து அதன் உபதேசத்தை பின்பற்றி நடக்கிறவர்களை அது ஆசீர்வதிக்கிறது.

"கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்" (சங்.128:1,2).

வேதாகமத்தை எழுதிய தேவன் பூரணமானவராய் இருக்கிறார். அவருடைய புஸ்தகமும் பூரணமானதாய் இருக்கிறது. அவர் அழிக்கப்பட முடியாதவராய் இருக்கிறபடியால், அது போலவே அவருடைய புத்தகமும் அழிக்கப்பட முடியாததாய் இருக்கிறது. தேவன் ஒரு போதும் மாறாதவராய் இருக்கிறபடியால், அவருடைய புஸ்தகமும் மறுபார்வை செய்யப்பட வேண்டியதில்லை. இன்றைய தேவைகளுக்கும் அது பொருத்தமானதாக இருக்கிறது. வேதாகமத்தின் பக்கங்களில் அதனுடைய மை இன்னும் ஈரமாக இருக்கிறது, முன்பு இருந்த வண்ணமாகவே. இது தேவனுடைய தெய்வீக தன்மை, ஒரே விதமான தன்மை மகத்துவம் இவற்றை மாத்திரம் பிரதிபலிக்கிற கண்ணாடியாக இராமல், மனஷனுக்கான அவருடைய அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறதும் அல்லாமல் மனுஷன் தன்னுடைய சிறுமையான நிலையிலும் தன் சிருஷ்டிகருக்கு முன்பாக இயலாதவனாக இருக்கிறான் என்பதையும் பிரதிபலிக்கிறது. நாம் பின்பற்ற பிரயாசப்படுகிற தேவனுடைய மகா பரிசுத்தத்தை நம்முடைய பலவீனங்களையும், தோல்விகளையும் தாண்டி உற்று நோக்குவோமானால் காணமுடியும்.

இப்புத்தகம் கிழக்கிலுள்ள எந்த தேசத்தையுமோ அல்லது மேல் நாட்டு தேசத்தையுமோ சேர்ந்ததல்ல. இது எந்த ஒரு மார்க்கத்தின் உற்பத்தி பொருளும் அல்ல மாறாக இது முழு உலகத்திற்கும் ஒரே தேவனாயிருக்கிறவரின் செய்தியாயிருக்கிறது. இது முழு உலகத்தின் ஒவ்வொரு நாட்டையும் ஒவ்வொரு மனுஷனையும் வழிநடத்தக் கூடியதாக இருக்கிறது. அதன் உபதேசங்களை பின்பற்றுவதற்காக அது நம்மை யுத்தம் செய்கிற கலகக்கார கூட்டங்களாக பிரிக்கிறதில்லை. மாறாக நம்முடைய நித்திய பிதாவுக்கு நாம் ஊழியம் செய்யும் படியாக அது நம்மை ஐக்கியப்படுத்தும்.

**கேள்விகள்**

1. உண்மையாகவே தேவனிடத்திலிருந்து வருகிற எந்த புத்தகமும், அதனுடைய பக்கங்களை முழுவதுமாக தேவனுடைய ---------------- கொண்டதாக இருக்கும்.

2. நவீன தேவைகளுக்கு பொருந்தும்படியாக வேதாகமம் இன்றைய தேதிக் கேற்றபடி கொண்டுவரப்பட வேண்டியதாயிருக்கிறதா?

3. வேதாகமத்தின் முதல் புத்தகம் எப்பொழுது எழுதப்பட்டது? கடைசி புத்தகம் எப்பொழுது எழுதப்பட்டது?



இப்போது மீண்டும், இயேசு சிலுவையில் ஏன் மரித்தார்? அதற்குப் பல காரணங்கள் உண்டு, ஆனால் முக்கிய காரணம் மனிதனை இரட்சிக்கும்படிக்கு மரித்தார் என்பதே உண்மையாகும். ஆனால் கிறிஸ்து அவரது மரணத்தைக் குறித்து சொல்லிய தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றும்படி சிலுவையில் மரித்தார் (கொலோ.2:14,யோவா.1:17, மத்.26:28) மனிதன் தன்னுடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற வேண்டுமென அவர் தம்முடைய இரத்தத்தை சிந்த மரித்தார் (எபே.1:7; அப்.22:16), சபையை ஸ்தாபிக்கும்படி மரித்தார் (எபே.5:25) மேலும் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொடுக்கும்படி மரித்தார் (2தெச.2:16).

ஆனால் கிறிஸ்து உலகத்தை இரட்சிக்கும்படி சிலுவையில் மரித்தார் என்பது உண்மையாகயிருந்தும், உலகமுழுவதிலும் அநேகர் இழந்தவர்களாக இருக்கின்றனர். ஏன்? இதற்கு பல காரணங்கள் உண்டு. அநேகர் தேவனுடைய சித்தத்தை அறியாதவர்களாக இருக்கின்றனர். பவுல், நான் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன் அறியாமையிலே நான் சபையை துன்பப்படுத்தினேன் என்றார் (1தீமோ.1:13) மற்றவர்கள் தாங்கள் இரட்சிக்கப்படும்படி தங்களில் அல்லது ஒரு சிறந்த நன்னெறி வாழ்வில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். ஆனால் கொர்நேலியும் அவன் வீட்டாரும் நல்ல ஜனங்களாக யிருந்தார்கள், ஆனாலும் இரட்சிக்கப்படும்படி கர்த்தருக்குக் கீழ்ப்படிவது அவர்களுக்கு அவசியமாயிருந்தது (அப்.10) தேவனுடைய மகிமையை விட மனுஷருடைய மகிமையை நேசிக்கிறவர்கள் அநேகர் உண்டு. கிறிஸ்து தம்மிடத்தில் விசுவாசமிக்கவர்களாயிருந்தும் தங்களுடைய நாட்களின் மதத் தலைவர்களால் தாங்கள் புறக்கணிக்கப்படுவோம் என்ற பயத்தினால் தம்மை அறிக்கை பண்ணாதவர்களைக் குறித்து பேசி, பிறகு அவர்கள் ஏன் தம்மை அறிக்கை பண்ணவில்லை என்பதைப் பற்றி விவரிக்கிறார்: "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" (யோவா.12:43). ஆம், இன்றும் இவர்களை போல் அநேகர் உண்டு. அவர்கள் சமயக் காரியங்களில் வஞ்சிக்கப்பட்ட உலக ஜனங்கள். யோவான், "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங்கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1யோவா.4:1). கள்ளப்போதகர்கள் அநேகர் இருக்கின்றபடி யினால், இப்போதும் கூட, அவர்களால் அநேகர் வழி தவறிப் போகின்றனர். மேலும் கடைசியாக, அநேகர் உலகத்தை நேசித்து, மாம்சத்தின் கிரியைகளில் சந்தோஷ மடைகின்றனர். இத்துடன் ஒரே பிரச்சனை என்னவென்றால் கர்த்தர் உலகத்தில் அன்பு கூராதிருங்கள் என்று நமக்கு சொல்லுகிறார் என்பதே. மேலும் மாம்சத்தின் கிரியைகள் மரணத்திற்கு இட்டுச் செல்லும் (கலா.5;ரோம.6:23).

என்னுடைய சிநேகிதரே, நீங்கள் இரட்சிக்கப்படும்படி கிறிஸ்து உங்களுக்காக மரித்தார் என்பதை அறிந்து கொண்டீர்களா? தயவுசெய்து அவரைப் புறக்கணியாதீர்கள் அல்லது இரட்சிக்கப்படும்படிக்கு அவர் ஒருவரே பரிகாரியாயிருக்கும் போது அவரை மறுதலிக்காதீர்கள். மேலும் அவர் ஒருவரே உங்களுக்கு நம்பிக்கை அளிப்பவர். அவரில் நீங்கள் விசுவாசம் வைத்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அவர் உங்களை

இரட்சித்து, தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்து கொள்வார். மேலும் நீங்கள் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் நிலைத்திருந்தால் ஒரு நாள் அவர் பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டை அருளிச்செய்வார் (மாற்.16:16; மத்.10:32; அப்.2:38,47; வெளி.2:10).

**நடப்புச் செய்திகள்**

- ஜவுளி ஏற்றுமதியாளர்களுக்கு புதிய சலுகைகள்.
- மெட்பிளஸ் நிறுவனம், தமிழகத்தில் அதிகளவில் மருந்தகங்களை துவக்கமுடிவு.
- டில்லியை அதிரவைத்த குழந்தை கடத்தல் கும்பலை போலிசார் கைது செய்தனர்.
- இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவு மேலும் வலுவடையும் வகையில் புதிய ராணுவ ஒப்பந்தம் கையெழுத்தாகி யுள்ளது.
- ஜார்கண்டில் பிறந்த குழந்தைகளுக்கு ஒலிம்பிக் வீராங்கனைகளின் பெயர்கள்.

**வாருங்கள் தேவனை ஆராதிப்போம்**



**கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்**
**38,மேயர் சிட்டிபாபு தெரு,**
**எல்லிஸ்ரோடு(மவுன்ட்ரோடு சமீபம்)**
**திருவல்லிக்கேணி**
**சென்னை -600 005**
**தொடர்புக்கு:**
**சகோ.தாமஸ்**
**9884047398**

தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். **9443558041**






K.பாஸ்கர் அவர்கள் 1982—ல் கர்த்தருடைய பணியை ஆரம்பித்து கடந்த 10/08/2016—ல் கர்த்தருடைய பணிகளை சிறப்பாக செய்து முடித்து கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். கர்த்தருடைய ஊழியத்தை மைசூர், சிங்காரா எஸ்டேட் நீலகிரி, குன்னூர், கோவில்பட்டி, சக்தி மற்றும் சிறுமுகை பகுதிகளில் ஊழியத்தை செய்திருக்கிறார். நான் அவருடன் நீலகிரியில் இருந்த காலத்தில் கேத்தி பாலாடா கிறிஸ்துவின் சபையார் நடத்தின மவுன்ட் சீயோன் வேதாகம கல்லூரியில் 1983—ல் அவருடன் சேர்ந்து படிக்கும் வாய்ப்பை தேவன் கொடுத்தார். என்னை ஊழியத்தில் முதலாவது பிரசங்கிக்கும்படி உற்சாகப்படுத்திய சகோதரன். அவரை பிரிந்து இருக்கும் குடும்பத்தாருக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் மற்றும் சபையாருக்கும் பரலோகத்தின் தேவன் ஆறுதல்தரும்படி ஜெபிக்கிறோம்.
ஆசிரியர்

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது - சங்கீதம் 116:15




# எது தேவனுடைய புத்தகம்?
## Which Is God`s Book? -Betty



**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**பெண்கள் பகுதி**




தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் வேதாகம எழுத்தாளர்களால் பேசப்பட்ட திட்டவட்டமான ஸ்தலங்கள் மற்றும், ஜனங்களின் உண்மையை சந்தேகிக்கும் குற்றமுடையவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய சந்தேகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக தவறு என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றன, இன்றைக்கு அநேகர் வேதாகமத்தின் தகவலை பண்டைய நகரங்கள் மற்றும் தொன்மையான பொருட்களை அகழ்ந்து ஆராய்ச்சி செய்ய ஒரு வழி காட்டியாக ஏற்றுக்கொள்கிறார்கள். தேவனிடத்தில் விசுவாசமில்லாதவர்கள் (SKEPTISS) இந்த புத்தகம் புராணக்கதைகளின் தொகுப்பு என்றும் சோதனை ன நேரத்தில் அது நிலை நிற்க வில்லை என்றும் அறிவித்தார்கள். இத்தகைய சொற்போர்களில் எந்த ஒன்றும் அதை சேதப்படுத்தக்கூடாமலிருக்கிறது.

தாங்கள் வேதாகமத்தின் போதனைகளை பின்பற்றுகிறவர்கள் என்று உறுதியாக சொல்லிக்கொள்ளுகிற மனுஷர் சில சமயங்களில் மிகவும் ஆபத்தான சத்துருக்களாக மாறியிருக்கிறார்கள். ஜனங்கள் மேல் தங்களுடைய வல்லமையை நிலைநாட்ட விரும்புகிற மார்க்க தலைவர்கள் திரள் கூட்டத்தாரிடம் இருந்து வேதாகமத்தை விலக்க தீர்மானம் செய்தவர்களாக ஒவ்வொரு வேதாகம பிரதியையும் சுட்டெரித்து, வேதாகம செய்தியை பொது ஜனங்களின் பல பாஷைகளில் மொழியாக்கம் செய்தவர்களை துன்புறுத்தி கொன்றிருக்கிறார்கள்.

வேதாகமத்தை விசுவாசிப்பதாக சாதிக்கும் மற்றவர்கள் வேதாகமத்தின் அதிகாரத்தை குறைவாக மதிப்பிடும் வார்த்தைகளை பேசுவதும், புஸ்தகங்களை எழுதுவதுமாக இருக்கிறார்கள். தங்களை விசுவாசிகள், அறிஞர்கள், வேதபண்டிதர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் தேவனுடைய வார்த்தையில் உள்ள அடிப்படை சத்தியங்களை மறுதலிக்கிறார்கள். அவர்கள் கூடுமானால் அதன் செய்தியை அழித்து விடுவார்கள்.

- ஆனாலும் இன்றைக்கு சர்வலோகத்திலும் வேதாகமத்தை போன்று பயப்படத்தக்க வகையில் எந்த ஒரு புத்தகமும் இல்லை.
- ஒவ்வொரு வருடமும் இதன் பிரதிகளே மற்றெந்த புஸ்தகங்களை காட்டிலும் அதிகமாக விற்பனை ஆகிறது, மற்ற புஸ்தகங்களை காட்டிலும் அதிகமான பாஷைகளிலும், பிராந்திய மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.
- வானத்தின் கீழே ஒவ்வொரு தேசத்தின் நன்னடத்தை பிரமாணங்களை உருவாக்குவதிலும் ஜெயம் கொள்ளும் செல்வாக்கை உடையதாக இருந்திருக்கிறது. ஒவ்வொரு இரக்கமுள்ள நல்ல பிரமாணத்துக்குமான தொடக்கத்தின் அடிச்சுவடுகளை பின்னோக்கி காண்போமேயாகில் அது தேவன் தம்முடைய ஆவியினால் ஏவப்பட்டு அளிக்கப்பட்ட அது முதலாவது தேவனால் அளிக்கப்பட்டதாகவே இருக்கிறது.
- எங்கே வேதாகமத்தின் உபதேசங்கள் பரவலாக பின்பற்றப்படுகிறதோ அங்கே வித்தியாசமில்லாமல் ஜனங்கள் எல்லாவகையிலும் செழிப்படைகிறார்கள். மேலும் ஒரு தேசமானது வேதாகமத்தின் கருத்துக்களை விட்டு விலகுகிறபொழுது, அந்த தேசம் மிகவும் தாழ்த்தப்பட்டுப்போகிறது.